# உதயன்

சுடர் : 37
கதிர் : 350

வெள்ளிக்கிழமை
11 நவம்பர் 2022

ஐப்பசி 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50


## கிளி.யில் விபத்து பெண் இறப்பு!

யாழ்ப்பாணம், நவ. 11
கிளிநொச்சி - உமையாள்புரம் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் நான்கு குழந்தைகளின் தாயொருவர் உயிரிழந்தார்.
சாரதிப் பயிற்சி நிலையமொன்றின் வாகனம் மோதிய 11

# தமிழர்களின் பிரச்சினைக்கு சுதந்திர தினத்துக்குள் தீர்வு!

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, நவம்பர் 11

**வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு அடுத்த சுதந்திர தினத்துக்குள் தீர்வு காணப்படும் என்று தெரிவித்த ஜனாதிபதி ரணில், இதற்காக வடக்கு -கிழக்கு தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அடுத்த வாரம் முதல் பேச்சு ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.** 11



## 'ஜி-20' நாடுகளுடன் மோதவேண்டி வரும்

### பருவநிலை மாநாடு தொடர்பில் நாடாளுமன்றில் ரணில் வெளிப்படை

கொழும்பு, நவ. 11
வளர்ச்சியடைந்த நாடுகள் தமது கார்பன் உமிழ்வை குறைத்துக்கொள்ளாவிட்டால், பருவநிலை மாற்றம் தொடர்பான அடுத்த மாநாட்டில் நாம் ஜி-20 நாடுகளுடன் நேரடியாக மோதுவோம் - இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி ரணில். 11

## அரியாலை வாள்வெட்டு ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், நவ. 11
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரியாலை தபால்கட்டை சந்திப்பகுதியில் வாள்வெட்டுக்கு இலக்கான நபரொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
மோட்டார்சைக்கிளில் வந்த இரு நபர்கள், தம்முடன் கொண்டுவந்த குடைக்குள் மறைத்து வைத்திருந்த வாளால் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர். தாக்குதலில் அரியாலை கனகரத்தினம் வீதியைச் 12

### ஊர்காவற்றுறையில்

## காணாமற்போயிருந்த தாயும் சேயும் மீட்பு!

யாழ்ப்பாணம், நவ. 11
ஊர்காவற்றுறை - கரம்பொன் மேற்கைச் சேர்ந்த வாய்பேச முடியாத தாயும் அவரது சேயும் கடந்த வியாழக்கிழமை முதல் தேடப்பட்டுவந்த நிலையில் அவர்கள் நேற்று பத்திரமாக மீட்கப்பட்டனர்.
மேற்படி பகுதியைச் சேர்ந்த நிறஞ்சினி (வயது - 24) என்ற பெண் தனது நான்கு 11

## முப்படைகளுக்கும் காணியை தாரைவார்க்க கடும் முயற்சி?

### பிரதேச செயலர்களுடன் 15ஆம் திகதி ஆளுநர் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 11
வடக்கு மாகாண ஆளுநர் உட்பட இலங்கை முழுவதிலும் ஆளுநர்கள் மாற்றம் செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், வடக்கு மாகாணத்தில் முப்படையினரும் காணிச் சுவீகரிப்பில் எதிர்கொள்ளும் தடைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் எதிர்வரும் 15ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெறவுள்ளது.
இந்தக் கலந்துரையாடலில் காணி அமைச்சின் 11

## பொதுச்சேவை ஆணைக்குழுவின் தலைவரானார் நா.வேதநாயகன்



யாழ்ப்பாணம், நவ. 11
வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவராக யாழ். மாவட்ட முன்னாள் செயலர் நா.வேதநாயகன் நியமிக்கப்பட்டுள்ளார்.
இவருக்கான நியமனக் கடிதம், வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவால் நேற்று வழங்கப்பட்டுள்ளது.
(அ-ஒ-5)

### யாழிலுள்ள

## துணைத்தூதரகம் மீது நேற்று போத்தல் வீச்சு!

யாழ்ப்பாணம், நவ. 11
யாழ்ப்பாணம் - மருதடி வீதியில் உள்ள யாழ். இந்தியத் துணைத் தூதரக அலுவலகத்தின் மீது போத்தலால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 11

# திருட்டுக்கும்பலிடம் இருந்து 60 பவுண் நகை நேற்று மீட்பு

### இருவர் கைது: பொலிஸார் அதிரடி!



யாழ்ப்பாணம், நவ. 11
யாழ்ப்பாணம் - தீவகம் உள்ளிட்ட பகுதிகளில் பல்வேறு திருட்டுக்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அவர்களிடம் இருந்து 60 பவுண் நகைகளும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இதுதொடர்பில்பொலிஸார்மேலும் தெரிவித்ததாவது:- 11

## யாழ். நகரப் பகுதியில் இராணுவம் சோதனை!

யாழ்ப்பாணம், நவ. 11
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இராணுவத்தினர் நேற்று பரவலாக வீதிச் சோதனையில் ஈடுபட்டனர்.
உயிர்கொல்லிப்போதைப்பொருளானஹெரோய்ன் மற்றும் இதர போதைப்பொருள்களில் பாவனை தீவிரமான அதிகரித்ததை அடுத்து இராணுவத்தினரை வைத்து போதைப்பொருள் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் மனித பாவனைக்குதவாத வாசனைத் திரவியங்கள் விற்பனை

## தோல் நோய் மருத்துவ நிபுணர் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 11

**உடலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் மனித பாவனைக்கு பொருத்தமற்ற வாசனைத் திரவியங்கள் மற்றும் அழகுசாதன பொருள்கள் நாடுமுழுவதும் விற்பனை செய்யப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

மருந்துகள் மற்றும் வாசனைத் திரவியங்களை இறக்குமதி செய்வது தொடர்பான சட்டம் முன்பு நடைமுறைப்படுத்தப்படாமையால் இந்தச் செயற்பாடு இடம்பெற்றுள்ளது என தோல் நோய் மருத்துவ நிபுணர் நயனி மதரசிங்க தெரிவித்துள்ளார்.


நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மருந்து ஒழுங்குமுறை அதிகாரசபையில் பதிவுசெய்யாமல் உயிருக்கு ஆபத்தான பொருத்தமற்ற பொருள்கள் நாட்டுக்குத் தருவிக்கப்படுகின்றன.

அவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் பல்வேறு தோல் நோய்கள் தாக்கும் அபாயமுள்ளது. துறைசார் அதிகாரசபையின் அங்கீகாரம் பெற்றவையை மாத்திரமே கொள்வனவு செய்யவேண்டும்.

தற்போது மருந்துகள் மற்றும் வாசனைத் திரவியங்களை இறக்குமதி செய்வது தொடர்பான சட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.



ஆகவே நுகர்வோர் தேவையற்ற பல வகையான அழகுசாதனப் பொருள்களைக் கொண்டு சருமத்தைக் கழுவினால் சருமத்தில் நன்மை பயக்கும் பக்ரீரியாக்கள் அழிந்துவிடும் என்பதனை உணரவேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# சீரானது கட்டுநாயக்கா கணினிக் கட்டமைப்பு

கொழும்பு, நவ. 11

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வுப் பிரிவின், கணினிக் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு நேற்று சீராக்கப்பட்டுள்ளது.

கணினிக் கட்டமைப்பில் முன்னதாக ஏற்பட்ட கோளாறு காரணமாக இயந்திரமல்லா மனிதவலு முறைமையில் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதனால் பயணிகள் அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

இந்த நிலையில் தற்போது கணினிக் கட்டமைப்பில் ஏற்பட்டிருந்த கோளாறு சீராக்கப்பட்டதையடுத்து நேற்றுச் சேவைகள் அனைத்தும் வழமைக்குத் திரும்பின என குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)




படுகொலை செய்யப்பட்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் நடராசா ரவிராஜின் 16ஆவது நினைவு தினம் சாவகச்சேரி பிரதேசசெயலகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை இடம்பெற்றது. இதன்போது அவரது மனைவி திருமதி சசிகலா ரவிராஜ் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். (ச-9)

# லைசென்ஸ் அச்சிடும் பணி ஆரம்பம்

கொழும்பு, நவ.11

சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடுவதற்குத் தேவையான 5 இலட்சம் அட்டைகள் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன என்று மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்தார்.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் சாரதி அனுமதிப்பத்திரங்கள் மீள அச்சிடப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடுவதற்கான அட்டைகள் இல்லாமையால் கடந்த காலங்களில் சுமார் 6 இலட்சம் பேருக்கு காகிதத்தில் தற்காலிகமாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. (எ-இ)

# வடக்கில் படையினர் குவிந்திருக்க போதைபொருள் கடத்தல் எவ்வாறு?

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி

கொழும்பு, நவ.11

கடற்படைக்கென தனியான புலனாய்வுப் பிரிவு, இராணுவத்துக்கென தனியான புலனாய்வுப் பிரிவு, பொலிஸ் புலனாய்வுப் பிரிவு, பயங்கரவாத தடைப் புலனாய்வுப் பிரிவு எனப் பல்வேறு புலனாய்வுப் பிரிவினர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பரவலாக நிறைந்திருக்கின்றனர். அவ்வாறு இருந்தும் போதைப்பொருள் இங்கு வருகின்றது என்றால் புலனாய்வுப் பிரிவினர் என்ன செய்கின்றார்கள்?

இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் பாவனை என்பது போருக்குப் பின்னரே அறிமுகமானது. இன்று வரையும் யாழ்ப்பாணம் முப்படையின் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றது. இங்கு யார் என்ன செய்தாலும் படையினருக்கு உடனடியாகவே தகவல்கள் தெரியும்.

மஞ்சள் கடத்தப்படும்போது உடனடியாக பிடிக்கப்படுகின்றது. பொருள்கள் வரும்போது உடனடியாகக் கடத்தல் குழு பிடிக்கப்படுகிறது.

ஆனால் போதைப்பொருள் வரும்போது மட்டும் அவ்வாறான நிலை காணப்படுவதில்லை.

200 கிலோ, 300 கிலோ கஞ்சா பிடிக்கப்படும்போதும், அதேநேரத்தில் வேறு இடத்தில் பெருந்தொகையான கஞ்சா கைமாறுகின்றது என்று கூறப்படுகின்றது.

இலங்கைக் கடற்படை திறமையாகச் செயற்பட்டால் கேரளக் கஞ்சாவை தடை செய்வது என்பது அவ்வளவு கடினமான விடயம் அல்ல.

கெக்கோயின், ஹெரோயின், ஐஸ் போன்ற பல்வேறு போதைப் பொருள்கள் தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாணத்துக்கு தாராளமாக வருகின்றன.

யாழ்ப்பாணத்து வீதிகளில் சோதனைச் சாவடிகளை அமைப்பதால் போதைப் பொருள்களை நிறுத்திவிட முடியாது. கொழும்பிலிருந்து வரும் போதைப்பொருள்களைத் தடுப்பதற்கும் இந்தியாவில் இருந்து வரும் போதைப்பொருள்களைத் தடுப்பதற்கும் வீதியில் நிற்கும் இராணுவத்தால் முடியாது.



பொலிஸாருக்கும், இராணுவத்துக்கும் போதைப்பொருள் தொடர்பான தகவல் கிடைத்தால் சம்பந்தப்பட்ட போதைப்பொருள் வியாபாரிகளுக்குத் தகவல் போகின்றது.

போதைப்பொருள் வியாபாரிகள் தனித்து செயற்படுகின்றார்களா? அல்லது சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் தரப்பின் பாதுகாப்புடன் செய்கின்றார்களா? என்ற கேள்வி எழுகின்றது - என்றார். (எ-20)

# 12,000 கிலோ கிராம் போதைப்பொருள் மீட்பு

கொழும்பு, நவ. 11

நடப்பு வருடத்தில் இதுவரை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களின்போது ஆயிரத்து 415 கிலோ ஹெரோய்ன், 10 ஆயிரத்து 222 கிலோ கஞ்சா, 370 கிலோ கொக்கேய்ன் ஆகிய உயிர்கொல்லி போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தத் தரவை பொலிஸ் போதைப்பொருள் பணியகம் வெளியிட்டுள்ளது.

மேலும் ஹெரோய்ன் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய சுற்றிவளைப்பின்போது 27 ஆயிரத்து 819 பேர் கைதாகினர்.

கஞ்சா போதைப்பொருள் தொடர்பான சுற்றிவளைப்பின்போது 26 ஆயிரத்து 518 சந்தேகநபர்கள் கைதாகினர் எனப் பொலிஸ் போதைப்பொருள் பணியகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்தாண்டு பிற்பகுதியில் இலங்கை மீட்சிப் பாதையில்

## மத்திய வங்கி நம்பிக்கை

கொழும்பு, நவ.11

**2023** ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இலங்கைப் பொருளாதாரம் மீட்சிப் பாதையில் நுழையும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் முதல் பாதியில் உச்சக்கட்ட நிச்சயமற்ற தன்மைகளை எதிர்கொண்ட இலங்கைப் பொருளாதாரம், ஆண்டின் இரண்டாம் பாதியில் ஸ்திரத்தன்மைக்கான அறிகுறிகளைக் காட்டியுள்ளது என்றும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் நான்கு வருட, 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் திட்டத்துக்காக, கடந்த செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி, சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர்கள் அளவிலான ஒப்பந்தத்தை இலங்கை மேற்கொண்டது. அதைத் தொடர்ந்து இலங்கை அதிகாரிகள் நாட்டின் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடன் கடன் மறுசீரமைப்பு பேச்சுக்களை ஆரம்பித்தனர்.

சர்வதேச நாணய நிதியம் பிணையெடுப்புத் தொகுப்பைச் செயல்படுத்த கடன் வழங்குநர்களிடமிருந்து நிதி உத்தரவாதங்கள் தேவை. அதன்படி, கடன் மறுசீரமைப்பு செயல்முறை மேம்பட்ட கட்டத்தை எட்டியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தில் நிதிவசதி திட்டமானது, நாட்டுக்கு மிகவும் தேவையான மற்றும் நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்ட கட்டமைப்பு மாற்றங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்பை வழங்கும். இது பொருளாதாரத்தை அதிக ஸ்திரத்தன்மை மற்றும் நிலையான வளர்ச்சியின் பாதையில் முன்னேற்றுவதற்கு கருவியாக இருக்கும்.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கடன் மறுசீரமைப்பு பேச்சு போன்றவை தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டதும் எதிர்வரும் காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுமான சீர்திருத்தங்களைக் கவனத்தில் கொண்டு பொருளாதாரமானது 2023 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியிலிருந்து மீட்சிப் பாதையொன்றுக்கு நிலைமாறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என அந்த அறிக்கையில் உள்ளது. (எ-இ)

## தெல்லிப்பழை பிரதேசசெயலக பண்பாட்டுப் பெருவிழா இன்று


யாழ்ப்பாணம், நவ. 11

தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தின் 2022 ஆம் ஆண்டின் பண்பாட்டுப் பெருவிழா, இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அளவெட்டி மகாஜன சபையில் நடைபெறவுள்ளது.

வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடன் பிரதேசசெயலக கலாசாரப் பேரவையால் விழா நடத்தப்படவுள்ளது.

விழாவில் பிரதேசத்தில் பல்வேறு கலைத்துறைகளில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய கலைஞர்களுக்கு மதிப்பளிப்பு இடம்பெறவுள்ளதோடு பிரதேச செயலகத்தின் அதி உயர் விருதான கலைச்சுடர் விருதும் பிரதேசத்தைச் சேர்ந்த ஐவருக்கு வழங்கப்படவுள்ளது.

தெல்லிப்பழைப் பிரதேசசெயலர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக மாவட்டச்செயலர் ம.பிரதீபன் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-14,9)



## கச்சாய்ப் பகுதியில் கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 11

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சாய்ப் பகுதியில் நேற்று கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கச்சாய் கடற்கரை பகுதியில் இராணுவத்தினர் சந்தேகத்துக்கிடமான பொருள் ஒன்றை அவதானித்த நிலையில் கைக்குண்டு என அடையாளம் கண்டனர்.

அதனையடுத்து கொடிகாமம் பொலிஸாருக்கு இராணுவத்தினர் தகவல் வழங்கினர்.

கொடிகாமம் பொலிஸார் நீதிமன்ற அனுமதி பெற்று கைக்குண்டை செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-125)

## பெரியபொக்கணைப் பகுதியில் கசிப்புக் காய்ச்சியவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 11

வாதரவத்தை பெரியபொக்கணைப் பகுதியில் கசிப்பு காய்ச்சிய குற்றச்சாட்டில் காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய இந்தக் கைது இடம்பெற்றது. இதன்போது 3 லீற்றர் கசிப்பை மீட்டதுடன் 20 வயதான சந்தேகநபர் ஒருவரையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

கைதானவரை காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸார், அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின் சந்தேகநபர் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். (ச-23)



### யாழ். போதனாவில்

## இருதய சத்திர சிகிச்சைப்பிரிவு புதுப்பிக்கப்பட்டு திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ்.போதனா மருத்துவமனையின் இருதய சத்திர சிகிச்சைப் பிரிவு புதுப்பிக்கப்பட்டு நேற்று முன்தினம் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர்களின் அனுசரணையில் புதுப்பிக்கப்பட்ட இந்தக் கட்டடத்தை சென். ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் கதிர்காமர் தம்பி மாஸ்டர் திறந்து வைத்தார். நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, பரியோவான் கல்லூரி முன்னாள் அதிபர் உட்பட மருத்துவர்கள், தாதியர்கள், பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-27)

## கோடாவுடன் இருவர் காரைநகரில் கைது!

யாழ்ப்பாணம், நவ. 11

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைநகர் ஊரிப் பகுதியில் கோடாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் களபூமி பொலிஸ் காவலரண் பொலிஸாரால் கடந்த செவ்வாய்க்கிழமை இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேபகுதியைச் சேர்ந்த 53 வயதான பெண்ணொருவரும் 20 வயதான ஆணொருவருமே கைதாகியுள்ளனர்.

அவர்களிடமிருந்து 7 ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கோடா மீட்கப்பட்டது எனவும் கைதுசெய்யப்பட்ட இளைஞனுக்கு சிறுவர் நீதிமன்றில் திறந்த பிடியாணை உள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின் சந்தேகநபர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை பிணையில் விடுவிக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ச-27)

## மூத்த ஊடகவியலாளர் லக்ஷ்மன் காலமானார்!



யாழ்ப்பாணம், நவ. 11

யாழ்ப்பாணம் நெடுந்தீவைச்சேர்ந்த மூத்த ஊடக வியலாளர் நாகேந்திரர் லட்சுமணராஜா நேற்று வியாழக்கிழமை காலமானார்.

ஊடகவியலாளர், கவிஞர், எழுத்தாளர் என்று பல துறை ஆளுமையைக் கொண்டவரான 'நெடுந்தீவு லக்ஷ்மன்' என அழைக்கப்படும் நாகேந்திரர் லட்சுமணராஜா, நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'உதயன்' உள்ளிட்ட பத்திரிகைகள் மற்றும் தேசிய பத்திரிகைகள் என்பவற்றில் அவர் சுயாதீன ஊடகவியலாளராகக் கடமையாற்றியுள்ளார். இவருக்கு கலாபூஷணம் விருதும் கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அவரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணத்தில் 30/1 நீக்கிலஸ் ஒழுங்கை, கச்சேரிநல்லூர் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்று குடும்பத்தினர் அறிவித்துள்ளனர். (அ-ம)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், நவ. 11

நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோயிலின் கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு யாகபூசைகளுடன் ஆரம்பமாகி காலை 8.47 மணி முதல் 9.59 மணிக்குள் இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து எதிர்வரும் 15 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஒ.14.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்துக்குள் அதிகாரப் போராட்டம்

## கூறுகின்றார் சன்ன ஜயசுமண எம்.பி.

**கொழும்பு, நவ. 11**

**சிறிலங்கா பொதுஜன பெரமுனவினர் சிலருக்கு அமைச்சுக்களை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவிக்கவில்லை. இந்த நிலையில் அரசாங்கத்துக்குள் அதிகாரப் போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.**

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பெரமுனவிலுள்ள மாவட்ட தலைவர்கள் உள்ளிட்ட பிரபல குழுவினருக்கு, அமைச்சுப்பதவிகளை வழங்குவதற்கு ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவிக்கவில்லை என்று தெரியவந்துள்ளது. மறுபுறம் எதிர்க்கட்சியிலுள்ள சிலரை அரசாங்கத்துக்குள் உள்வாங்குவதற்கான முயற்சிகளை ரணில் முன்னெடுத்து வருகின்றார்.

எதிர்க்கட்சியிலிருந்து அரசாங்கத்துடன் இணையவுள்ளவர்களுக்கு அமைச்சுப்பதவிகளை வழங்கினால், தற்போது அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிப்பவர்கள் பதவி விலகுவோம் என அறிவித்துள்ளனர்.

இந்த நிலைமையை சமநிலைப்படுத்துவதற்கு ரணில் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றார். ஜனாதிபதியின் முயற்சி எந்தளவுக்கு வெற்றியளித்துள்ளது என்பதை வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பின்போது பார்க்கமுடியும். இவற்றுக்கு மத்தியிலேயே தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த இரண்டு முயற்சிகளினதும் விளைவாக இறுதியில் இரு தேர்தல்களையும் நடத்த வேண்டிய நிலைமைக்கு அரசாங்கம் தள்ளப்படும். இதன்மூலம் அரசாங்கத்தின் ஸ்திரமற்ற நிலைமையே வெளிப்படுகிறது - என்றார். (எ-14,இ)

## யாழ்.பரமேஸ்வராக் கல்லூரி நூற்றாண்டு மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

நூற்றாண்டு விழாக்குழுத்தலைவர் பேராசிரியர் திருமதி சுபதினி ரமேஷ் தலைமையில் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். வரவேற்புரையை ஸ்ரீ பரமேஸ்வராக்கல்லூரி அதிபர் யோக.தயாளன், வெளியீட்டுரையை செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ச)



## ஹெரோய்னுடன் நால்வர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 11

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளுடன் நான்கு சந்தேக நபர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டனர் என்று நெல்லியடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நெல்லியடி பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் இருந்து 126 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. சந்தேகநபர்கள் வல்வெட்டித்துறை மற்றும் நெல்லியடி பகுதிகளைச் சேர்ந்த 25 மற்றும் 30 வயதுக்குட்பட்டவர்கள் என்று தெரிவித்த நெல்லியடிப் பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-14,26)

## யானைகள் அட்டகாசத்தால் பெரும்போகச் செய்கை பாதிப்பு

### நெத்தலியாறு, கல்மடுநகர் விவசாயிகள் கவலை

கிளிநொச்சி, நவ. 11

கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்ட கல்மடுக்குளத்தின் கீழ் பல ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட பெரும்போகப் பயிர்ச் செய்கையை யானைகள் உட்புகுந்து அழித்துள்ளன என விவசாயிகளால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்மடுக் குளத்தின்கீழ் நெத்தலியாறு பகுதி மற்றும் கல்மடுநகர் ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக யானைகள் உட்புகுந்து எமது பயிர்களை அழித்து வருகின்றன.

இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறையிடப்பட்டபோதும் எமது பயிர்களைக் காப்பதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தற்போது பெரும்போக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு சில தினங்களிலேயே யானைகள் உட்புகுந்து எமது வாழ்வாதாரப் பயிர்களை அழித்து நாசம் செய்துள்ளன.

கடந்த சிறுபோகப் பயிர்ச்செய்கையின் போது செய்கைபண்ணப்பட்ட நெல் கொள்வனவு இடைநிறுத்தப்பட்டு நாம் திண்டாடி வரும் நிலையில் பெரும்போகப் பயிர்ச்செய்கையை யானைகள் உட்புகுந்து அழித்து வருகின்றன.

இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி எமது வாழ்வாதாரப் பயிர்களை அழித்துவரும் யானைகளைக் கட்டுப்படுத்துவதுடன் எமக்கு இழப்பீடும் பெற்றுத்தர வழிவகை செய்ய வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ச-113)

## ஆண்டு நிறைவும் பொன்விழாவும்

சாவகச்சேரி, நவ. 11

ஏழாலை தெற்கு தமிழ்ப் பொதுப் பணிமன்றத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் சபாபதி நாகராசாவின் ஞாபகார்த்த பொன்விழாவும் ஏழாலை தெற்கு அ.மி.த.க பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது சமூக சேவையாளர்கள் கௌரவிக்கப்பட்டதோடு ஏழாலை கிராமத்தின் உள்ளூர் மற்றும் புலம்பெயர் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ-14,159)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். செரிமானப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது, உணவு விடயத்தில் கவனம் தேவை.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதர வகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். அனுகூலம் உண்டாகும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். பிரமுகர்களின் அறிமுகமும் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல்கவனம்தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபட வேண்டி இருக்கும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு. மறைமுக எதிர்ப்பு நீங்கும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். சங்கடங்கள் ஏற்படும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும். மகிழ்ச்சி ஏற்படும்.

**மீனம்:** புதிய முயற்சிளை தொடங்குவது நல்லது. வாழ்க்கைத் துணையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏனிந்த முட்டுக்கொடுப்பு?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் எந்த முரண்பாடும் இல்லை – பிளவும் இல்லை என்று கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார்.

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயகக் கட்சி. கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கருத்துக்களை சுதந்திரமாக வெளியிட முழு உரிமை உண்டு. சிலரின் கருத்துக்களை வைத்துக் கொண்டு கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கிடையில் முரண்பாடு – பிளவு என்று எடைபோடக்கூடாது. உண்மையில் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கிடையில் எந்த முரண்பாடும் பிளவும் இல்லை. அவர்கள் ஓரணியாகச் செயற்படுகின்றார்கள்' என்று இரா.சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் மௌனிக்கும் வரையில் கூட்டமைப்புக்குள் எந்தப் பிளவும் – முரண்பாடும் இருக்கவில்லை. உட்கட்சி ஜனநாயகமும் தாராளமாக இருந்தது. கருத்து முரண்பாடுகள் எல்லாம் கட்சிக்குள் பேசி முடிக்கப்பட்டன. பொது வெளியில் எந்தவொரு கீறல்களும் இருக்கவுமில்லை, தெரியவரவுமில்லை.

ஆனால், 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிலைமை தலைகீழானது. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஜனநாயகம் பற்றிப் பேசினாலும் அவர் ஒரு சர்வாதிகாரியாகவே நடந்து வந்திருக்கின்றார்.

தமிழ்த் தேசிய அரசியல் ஒற்றுமைப்பட வேண்டிய சூழலில், தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்க வேண்டிய பொறுப்பு கூட்டமைப்புக்கு கிடைத்திருந்த சந்தர்ப்பத்தில், சம்பந்தனின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகள் கட்சியை கொஞ்சம் கொஞ்சமாக சிதறடித்தன.

கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தங்கள் உட்கட்சி முரண்பாடுகளைப் பொதுவெளியில் முன்வைக்கத் தொடங்கினர். பகிரங்க வெளியில் அது தொடர்பான விமர்சனங்களையும் வெளியிட்டனர். இது ஜனநாயகப் பண்பியல்புதான். ஆனால், அதுவே கட்சியை ஆணிவேருடன் சரித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணியினரின் வெளியேற்றத்துடன் கூட்டமைப்பின் பிளவுக்கு பிள்ளையார் சுழி போடப்பட்டது. அதைத் தொடர்ந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் பிரதானமான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கோலோச்சுதல் காரணமாக பங்காளிக் கட்சிகள் அடிக்கடி முரண்பட்டிருந்தன.

இவர்களது உட்கட்சி முரண்பாடுகள் பொதுவெளியில் அம்பலமாகின. அப்போது கூட்டமைப்பின் உறுப்பினர்கள் நவக்கிரகங்கள் போல ஆளுக்கொரு கருத்தை வெளியிட்டு வந்தனர்.

நல்லாட்சி அரசின் காலத்தில் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியின்போதும் கூட இவ்வாறானதொரு நிலையே நீடித்தது. கட்சிக்குள் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அது கட்சிக்குள் பேசித் தீர்க்கப்படவேண்டும். பொதுவெளியில் கட்சியின் கொள்கையை ஒட்டிய நிலைப்பாட்டையே உறுப்பினர்கள் பிரதிபலிக்கவேண்டும்.

ஆனால், கூட்டமைப்பு அந்த விடயத்தில் பெரும் தவறிழைத்தது. ஒவ்வொரு உறுப்பினர்களும் கட்சிக்குள் பேசப்பட வேண்டிய விடயங்களை பொதுவெளியில் பேசி கட்சியின் மதிப்பை கீழிறக்கினர். கட்சிக்குள் பேசுவதற்கான வாய்ப்புக்கள் மழுங்கடிக்கப்பட்டமையும், கட்சியின் தலைமை எதேச்சாதிகாரப் போக்கில் செயற்பட்டமையுமே உறுப்பினர்கள் அவ்வாறு பேசுவதற்குக் காரணம்.

இதேபோக்குத்தான் இப்போதும் நீடிக்கின்றது. கட்சியில் ஒரு சிலர் தம்மிஷ்டப்படி செயற்பட்டு அதைக் கட்சியிலுள்ள ஏனையோர் மீது திணிப்பதன் விளைவாகவே உறுப்பினர்கள் தங்கள் நிலைப்பாடுகளை பொதுவெளியில் முன்வைப்பதோடு, கட்சியின் மக்கள் விரோதப் போக்கையும் வெளிப்படுத்த தலைப்படுகின்றனர். இது ஆபத்தானது.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சொல்வதைப்போல கட்சிக்குள் எந்தப் பிளவும் இல்லை என்பது முழுப்பூசணிக் காயை சோற்றில் மறைப்பதற்கு ஒப்பானது. கட்சி சிதறுண்டு நொருங்கும் தறுவாயில் சேடம் இழுத்துக் கொண்டிருக்கின்றது, இதுதான் உண்மை.

கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு இடையில் எந்த முரண்பாடும் இல்லை என்பது அப்பட்டமான பொய். இந்தப் பொய்க்கு முட்டுக் கொடுத்து முரண்பாடு இல்லை என்று சொல்வதற்குப் பதிலாக உட்கட்சி ஜனநாயகத்தை வலுப்படுத்துவதே சம்பந்தன் செய்யக்கூடிய செயற்கரிய செயல்.

## வடமாகாண மரநடுகை மாதம் நவம்பர் 2022

"நீங்கள் வலிமை, பொறுமை ஆகியவற்றின் அருமையை உணர்வீர்களாயின் மரங்களின் சகவாசத்தை வரவேற்பீர்கள்"

— ஹால் போர்லாண்ட் (அமெரிக்க இயற்கையியலாளர்)






# இலங்கைத் தீர்மானம் ஐ.நா. பொதுச்சபையில்

கொழும்பு, நவ.11

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கடந்த செப்ரெம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**

மனித உரிமைகள் பேரவையின் தலைவர் ஃபெடரிகோ வில்லேகாஸ், நியூயோர்க்கில் நடைபெற்ற 77 ஆவது பொதுச் சபை அமர்வில் இலங்கை தொடர்பான தீர்மானத்தை சமர்ப்பித்தார்.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல் என்ற தலைப்பிலான இந்தத் தீர்மானம் 20 க்கு 7 என்ற வாக்கு விகிதத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை இலங்கை மீதான தீர்மானத்தை நடைமுறைப்படுத்த ஐக்கிய நாடுகள் சபை 6 மில்லியன் அமெரிக்க டொலரை ஒதுக்கவேண்டியேற்படும். இந்தநிலையில் அண்மைய ஆண்டுகளில், மனித உரிமைகள் பேரவை, தமது அதிகரித்து வரும் பணிகளின் காரணமாக நிதிச் சவால்களை எதிர்கொள்கிறது என்று மனித உரிமைகள் பேரவையின் தலைவர் ஃபெடரிகோ வில்லேகாஸ் தெரிவித்துள்ளார். இலங்கை தொடர்பான தீர்மானத்தை நடைமுறைப்படுத்த, ஐக்கிய நாடுகள் சபை, நிதியளிக்கவேண்டும் என்று ஃபெடரிகோ வில்லேகாஸ் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-இ)

# பொருளாதாரத்தை மீட்பதற்காக உலக வங்கி தொடர்ந்து உதவும்!

இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு உலக வங்கி தொடர்ந்து ஆதரவளிக்கும் என அதன் தலைவர் டேவிட் மல்பாஸ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடம் உறுதிப்படுத்தியுள்ளார்.

கடன் மறுசீரமைப்புக்கு உடனடியாக உடன்படுவதற்கு இலங்கையின் உத்தியோகபூர்வ இருதரப்பு மற்றும் தனியார் துறை கடன் வழங்குநர்களுடன் தொடர்ந்தும் பேச்சுக்களில் ஈடுபட வேண்டும் என்று அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஊக்குவித்துள்ளார்.

எகிப்தில் நடைபெற்ற மாநாட்டில் உலக வங்கியின் தலைவர் டேவிட் மல்பாஸை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பு தொடர்பாக உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய கடன் நெருக்கடிக்கு சரியான நேரத்தில் பயனுள்ள தீர்வுக்கான முக்கியத்துவத்தை உலக வங்கியின் தலைவர் வலியுறுத்தியுள்ளார். பொதுச் செலவினங்களின் செயற்திறனை மேம்படுத்துவதற்கான வழிகள் மற்றும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்குத் தேவையான சீர்திருத்தங்கள் தொடர்பாகவும் இதன்போது விவாதித்துள்ளனர்.

பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும் நிலையான தனியார் துறையின் வளர்ச்சிக்கான அடித்தளத்தை உருவாக்குவதற்கும் உலக வங்கி குழுவின் ஆதரவை டேவிட் மல்பாஸ் உறுதிப்படுத்தியுள்ளார். (எ-இ)

**நாளை** 12.11.2022 சனிக்கிழமை ஐப்பசி 26

சுபநேரம் : 03.06 - 04.36
ராகுகாலம்: 09.06 - 10.36

சங்கடஹர சதுர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குப் பாடசாலைகளிலுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புக

## கல்விச் சமூகத்தினரால் கோரிக்கை

**யாழ்ப்பாணம், நவ. 11**

**வடக்கு மாகாணத்திலுள்ள தேசிய பாடசாலைகள் மற்றும் 1ஏபி, 1 சி வகை பாடசாலைகளில் ஆய்வுகூட உதவியாளர், நூலகர், நூலக உதவியாளர்கள் மற்றும் சிற்றூழியர் தரங்களைச் சேர்ந்த பதவிகளுக்கான வெற்றிடங்கள் 10 வருடங்களுக்கு மேலாக நிரப்பப்படவில்லை. அவற்றை உடன் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கல்விச் சமூகத்தினரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

பாடசாலைகளில் இடைநிலை மற்றும் உயர்தரப் பிரிவு வகுப்புகளுக்கான ஆய்வுகூடங்கள் உள்ள போதும் ஆய்வுகூட உதவியாளர்கள் இல்லாததால் மாணவர்கள் பாடங்களைக் கற்பதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

சில பாடசாலைகளில் கடமையாற்றிய ஆய்வுகூட உதவியாளர்கள் இளைப்பாறிச் சென்றதால் ஆசிரியர்களே அந்தக் கடமைகளை மேற்கொள்கின்றனர்.

அனைத்துப் பாடசாலைகளிலும் நூலகங்கள் அமைக்கவேண்டுமென கல்வி அமைச்சால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆயினும் பாடசாலைகளுக்கு நூலக உதவியாளர் நியமனம் கூட மேற்கொள்ளப்படாததால் அதற்கென ஆசிரியர் ஒருவரையே பாடசாலை நிர்வாகம் நியமிக்கின்றது.

மேலும் காவலாளிகள், சுத்திகரிப்பு தொழிலாளர்கள் இன்மையால் இரவு நேர காவலாளி வரும் வரை அதிபர் பாடசாலையிலேயே காத்திருக்க வேண்டியுள்ளது. இதன் காரணமாக பாடசாலை அதிபர்களும் சொல்லொணாத சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே இவற்றைக் கவனத்திற்கொண்டுகல்வித்திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்ப வடக்கு மாகாண சபையோ அல்லது மாகாண ஆளுநரோ துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ச-9)

# தென்மராட்சியில் தேங்கும் வெள்ளத்துக்கு காரணம் என்ன?

### ஒரு வாரத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்க பணிப்பு

யாழ்ப்பாணம், நவ. 11

தென்மராட்சிப் பகுதியிலுள்ள வயல் நிலங்களில் தேங்கும் வெள்ளநீர் தொடர்பில் ஒரு வார காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வட மாகாண ஆளுநரின் செயலாளர் வாகீசன் பணிப்புரை விடுத்துள்ளார்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள வயல் நிலங்களில் வெள்ளநீர் தேங்கி நிற்பது தொடர்பில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் ஆளுநரின் செயலாளருக்கும் தென்மராட்சி விவசாயிகளுக்கும் இடையிலான சந்திப்பு வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது தென்மராட்சி பிரதேசத்தில் வெள்ளநீர் தேங்குவதற்கு இயற்கையான தரைத் தோற்றம் காரணமா? அல்லது செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட தடைகள் காரணமா? என ஆளுநரின் செயலாளர் கேள்வி எழுப்பினார். அதன்பின்னரே வெள்ளநீர் தொடர்பில் ஒரு வார காலத்துக்குள் ஆளுநர் செயலகத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்று நீர்பாசனத் திணைக்களம் மற்றும் கமநலசேவைத் திணைக்கள உயர் அதிகாரிகளுக்கு அவர் பணிப்புரை விடுத்தார். (ஒ.14,27)



### மரநடுகை செயற்றிட்டம் பூநகரியில் ஆரம்பம்

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில், இந்த ஆண்டு மரநடுகை செயற்றிட்டம் 'பழமுதிர்ச் சோலை' எனும் கருப்பொருளில் பூநகரி ஸ்ரீ சர்வ விக்கின விநாயகர் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், பொருளாளர் க. கேதீஸ்வரநாதன் ஆகியோர் கலந்துகொண்டு ஆலய அறங்காவலர் குழுவினரிடம் மரக்கன்றுகளை வழங்கியதோடு, நடுகையும் செய்தனர். (ஒ-14)

# யாழ். மத்திய பேருந்து நிலைய பொறுப்பதிகாரியை இடமாற்றுக

### தொழிற்சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலைய பொறுப்பதிகாரி பக்கச்சார்பாகச் செயற்படுகின்றார். அவரை இடமாற்றம் செய்து தகுதியுடைய ஒருவரை நியமிக்குமாறு வலியுறுத்தி இலங்கைப் போக்குவரத்துச்சபையின் வடக்கு மாகாண அனைத்துத் தொழிற்சங்கம் வடக்கு மாகாண ஆளுநருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இதுதொடர்பில் அந்தக் கோரிக்கைக் கடிதத்தில் உள்ளதாவது:

தற்போது மத்திய பேருந்து நிலையப் பொறுப்பதிகாரி பதவியில் உள்ளவர் பக்கச்சார்பாகச் செயற்படுகின்றார். தொழிலாளர்களின் எதிர்ப்புக்கு அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி வருகிறார்.

அவர் மீது வடபிராந்திய போக்குவரத்து சபையின் 7 சாலைகளின் ஊழியர்களால் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவரை இடமாற்றி பொருத்தமான தகுதி நிலையுடைய ஒருவரை அந்தப் பதவிக்கு நியமிக்கவேண்டும்.

எமது கோரிக்கை தொடர்பில் சாதகமான பதில் கிடைக்கப்பெறாவிடின் அனைத்துத் தொழிற்சங்கங்களும் இணைந்து பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட நேரிடும் - என்றுள்ளது.

அனைத்து தொழிற்சங்க பிரதிநிதிகள் கையொப்பமிட்ட குறித்த கடிதத்தின் பிரதி, யாழ்.மாவட்டச் செயலர், வடக்கு மாகாண தொழிற்சங்கத் திணைக்களம், யாழ்.கோப்பாய் பொலிஸ் நிலையங்கள் ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ச-26)



புதுக்குடியிருப்பில் தாய்த்தமிழ்ப் பேரவையின் ஆதரவோடு 'நேசக்கரங்கள்' அமைப்பின் ஒன்றிணைந்த நண்பர்களின் 40 லட்சம் ரூபா நிதிப்பங்களிப்பில் இளைஞர், யுவதிகளுக்கு இலவச கணினிப் பயிற்சி கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஒ-14,19)

### நாணய நிதியத்தின்

# முகாமைத்துவப் பணிப்பாளருடன் ரணில் கலந்துரையாடல்

கொழும்பு, நவ. 11



எகிப்தில் தற்போது நடைபெற்றுவரும் காலநிலை தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

மாநாட்டின் பகுதி அம்சமாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இலங்கையின் கடன் முகாமைத்துவம் தொடர்பில் இந்த இருதரப்புப் பேச்சு இடம்பெற்றுள்ளது என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (மு)

# பாடசாலை மாணவர்களுக்கு மின்சாரம் பாய்ச்சி விசாரணை

### தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையால் ஐவர் கைது

கொழும்பு, நவ. 11

களுத்துறை மில்லேனிய பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவர்களை பாடசாலைக்கு வெளியே அழைத்துச் சென்று மின்சாரம் பாய்ச்சி சித்திரவதை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தில் தொடர்புடைய ஐவரிடம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை விசாரணை மேற்கொண்டு நீதிமன்றில் முற்படுத்தியுள்ளது.

பெற்றோரால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய பாடசாலை அதிபர், பிரதி அதிபர் மற்றும் 3 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோரிடமே 5 மணிநேர வாக்குமூலம் பெற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளனர் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதயகுமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

பாடசாலை ஆசிரியர் ஒருவரின் பணப்பையைக் காணவில்லை என அதிபர் உட்பட பல ஆசிரியர்கள் கடந்த 2ஆம் திகதி 12 மாணவர்களை பாடசாலை நூலக அறையில் அடைத்து மண்டியிட வைத்து கடுமையாகத் தண்டித்ததுடன் திருட்டு தொடர்பில் பொலிஸாருக்கு அதிபர் தகவல் வழங்கியுள்ளார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் மூன்று மாணவர்களை பொலிஸ் ஜீப்பில் ஏற்றிச் சென்று மின்சாரம் பாய்ச்சி கொடூரமாகத் தாக்கி விசாரணைக்குட்படுத்தியுள்ளனர் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதனையடுத்து சந்தேகநபர்கள் ஐவரும் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது அதிபர் மற்றும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் பிரதி அதிபர் மற்றும் பொலிஸ் ஜீப்பின் சாரதி ஆகியோரை பிணையில் விடுவிக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

காயமடைந்த மூன்று மாணவர்களும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்

# வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவுசெய்தல் - 2023

யாழ் போதனா வைத்தியசாலைக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து 2023 ம் ஆண்டிற்குப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை கீழ்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரித்து ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மீளளிக்கப்படாத வைப்புப்பணம் ரூபா 1000.00 ஐ எமது அலுவலக காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை அல்லது பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்னும் பெயருக்கு பெறப்பட்ட பிரதான அஞ்சல் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் காசாக்கக் கூடிய காசுக்கட்டளையை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து தபாலுறையில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் "வழங்குநர்கள் பதிவு செய்தல் - 2023"எனக் குறிக்கப்பட்டு பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 2020.11.30 ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக அலுவலகத்தில் கையளிக்கலாம். மேலும் இது தொடர்பான விபரங்களை யாழ் போதனா வைத்தியசாலை மின்னஞ்சலில் **www.thjaffna.lk** பார்வையிடலாம்.

| உருப்படி இல | பொது பொருட்கள் |
|---|---|
| A – 01 | அலுவலக காகிதாதிகள், எழுது பொருட்கள், மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள். |
| A – 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் (மரம், உருக்கு, பிளாஸ்ரிக், பைவர் போன்றவை) |
| A – 03 | கணனிகள் கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், போட்டோபிரதி இயந்திரம், இலத்திரனியல் பிரதி பண்ணும் இயந்திரங்கள் (Duplo), CCTV கமராக்கள், ரோனியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் என்பன. |
| A – 04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள். |
| A – 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள் வகைகள் நீர்க்குழாய்கள், இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள். |
| A – 06 | சகல விதமான வீட்டுப்பாவனைப் பொருட்கள் (வாளி, ஜக், கேத்தல், பீங்கான் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் போன்றவை) |
| A – 07 | தும்பு மெத்தை, இறப்பர் மெத்தை , மெக்கின்ரோஸ், எலாஸ்டிக், நைலோன் நூல் மற்றும் பஞ்சினாலான தலையணைகள் போன்றவை. |
| A – 08 | கட்டட, இரும்புப் பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருட்கள் மணல், கல், தீராந்தி, சலாகை போன்றவை. |
| A – 09 | மின்சாரப் பொருட்கள்,அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், மின்பல்புக்கள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்களும். |
| A – 10 | புற்பாய், தும்புத்தடி. விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை. |
| A – 11 | எல்லா விதமான காபோலிக் சவர்க்காரம், இயந்திரத்தில் துணி துவைக்கும் தூள், பார் சவர்க்காரம் சுத்தப்படுத்துவதற்கான திரவ வகைகள், சவர்க்காரத்தூள், சேவிங் பிளேட் மற்றும் ஏனையவை. |
| A – 12 | டயர், டியூப், பற்றிகள் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் |
| A – 13 | தோல் உற்பத்திப் பொருட்கள் - சப்பாத்துக்கள், சிலிப்பர்கள், எல்லா விதமான பாதணிகள். |
| A – 14 | குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுக் குளிராக்கிகள், தொலைக்காட்சிப்பெட்டிகள், DVD player மற்றும் அதன் உதிரிப்பாகங்களும். |
| A – 15 | சகல வகையானரெக்சீன் துணிகள், பொலித்தீன், பைகள், கழிவகற்றும் பொலித்தீன் பைகள் போன்றவை. |
| A – 16 | இறப்பர் முத்திரை வகைகள், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகை தினமுத்திரைகள் தயாரித்தல். |
| A – 17 | பால்மா வகைகள் மற்றும் ஊட்டச்சத்துப் பானங்கள். |
| A - 18 | LP வாயு மற்றும் வாயுரெகுலேட்டர், காஸ் பனர்,காஸ் குழாய். |
| A - 19 | சத்திரசிகிச்சைக்கு தேவையான தைத்த உடுப்புகள் (வைத்தியர், தாதி, சிரேஷ்ட ஊழியர்கள், நுளம்புவலை, கட்டில் விரிப்பு, தலையணைஉறை, GS Towel) |
| A – 20 | அலுவலகஅடையாள அட்டை மற்றும் பெயர் பலகை தயாரித்தல். |
| A – 21 | மருந்துகள் இடும் உறை/ Xகதிர் அட்டை இடும் உறைமற்றும் அச்சிடல் வேலைகள் போன்றவை. |

| உருப்படி இல | மருத்துவப் பொருட்கள் |
|---|---|
| B-01 | சத்திரசிகிச்சை, மருத்துவ உபகரணங்கள் போன்றவை. |
| B-02 | ஆய்வுகூட உபகரணங்கள். |
| B-03 | சத்திரசிகிச்சை, மருத்துவ ஆய்வுகூட நுகர்வுப்பொருட்கள் (biopsy needles, catheter, Distill water, surgical spirit, & other such things etc) |
| B-04 | பதிவு செய்யும் சுருள்கள் [Recording Paper] (ECG, ETT, CTG, EEG recording paper & other such things) |
| B-05 | சத்திரசிகிச்சைப் பாதுகாப்புப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், மருந்து வகைகள், சத்திரசிகிச்சைத் துணையுறுப்புகள் / X கதிர் போன்றவை. |

| உருப்படி இல | சேவைகள் |
|---|---|
| C – 01 | உருக்கு மற்றும் மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல் போன்றவை. |
| C – 02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் ( காற்றுக் குளிராக்கி, குளிர்சாதனப்பெட்டி, தொலைகாட்சிப் பெட்டிகள் அதனோடிணைந்த உபகரணங்கள்) |
| C – 03 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும், மீளமுறுக்குதலும் (Rewinding) |
| C – 04 | அலுவலக உபகரணங்கள் திருத்துதல் (கணனி, Duplo இயந்திரம், புகைப்படபிரதி இயந்திரம், Fax இயந்திரம்) |
| C – 05 | பத்திரிகை விளம்பரம் பிரசுரித்தல். |
| C – 06 | சலவை சேவைகள். |
| C – 07 | காற்றுக்குளிராக்கி பராமரித்தல் - Air Conditioner Maintenance |
| C – 08 | உள்ளக தொலைபேசி மற்றும் உள்ளக வலையமைப்பு பராமரித்தல் - Intercom Maintenance |
| C – 09 | வாயுஅடுப்பு, வாயு மற்றும் ஒட்சிசன் உபகரணங்கள் திருத்துதல் |
| C – 10 | வீட்டு உபயோகப் பொருட்கள் திருத்துதல், பொலிசிங் செய்தல், கதிரை பின்னுதல் |
| C – 11 | வைத்தியசாலை உபகரணங்கள், சத்திரசிகிச்சை உபகரணங்கள் திருத்துதல் |
| C - 12 | தையல் வேலைகள். |

| உருப்படி இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| D – 01 | சகல விதமான வாகனங்கள் திருத்துதல், வாகன மின்சார, குளிரூட்டி திருத்த வேலைகள், சீற், குசன் வேலைகள் போன்றவை. |
| D – 02 | சகல விதமான வாகனமும் சுத்திகரிப்புச் செய்தல். |

| உருப்படி இல | வேலைகள் |
|---|---|
| E – 01 | கட்டிட நிர்மாணம், கட்டிட புனரமைப்பு, கட்டிடத் திருத்தங்கள் போன்றவை (கட்டுமானப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பதிவு செய்யப்பட்ட செல்லுபடியாகும் காலத்திற்குரிய பிரதி இணைக்கப்படல் வேண்டும்) |
| E – 02 | அலுமினிய நிர்மான வேலைகள். |
| E – 03 | தொலைபேசி இணைப்பு மற்றும் உள்ளக வலையமைப்பு போன்றவை. |

| உருப்படி இல | அகற்றப்படும் பொருட்களை விற்பனை செய்தல் |
|---|---|
| F – 01 | (கண்ணாடி, பிளாஸ்டிக் போத்தல், அலுமினியப் பாத்திரம், X-கதிர் அட்டை, X -கதிர் கழுவும் திரவம், சிரட்டை, டயர், டியூப், சமையல் அறையில் அகற்றப்படும் சகல விதமான பொருட்கள் அட்டை, கடதாசி மற்றும் கடதாசிப் பெட்டிகள் போன்றவை) |

| உருப்படி இல | உணவுப் பொதிகள் மற்றும் குளிர்பான வகைகள் |
|---|---|
| G – 01 | (சிற்றுண்டி வகைகள்,உணவுப்பொதிகள் மற்றும் குளிர்பானங்கள் போன்றவை) |

(CR 7057) (6/6)

## நிபந்தனைகள்:

01. வழங்கல்கள், சேவைகள் 2023 ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
02. திருப்திகரமற்ற வழங்கல்கள், சேவைகளை நிராகரிக்கவும் வெளி மூலங்களிலிருந்தும் கேள்வி கோரும் உரிமையும் பணிப்பாளருக்கு உண்டு.
03. பதிவுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை பணிப்பாளருக்கு உண்டு.
04. பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக ஆகக் குறைந்தது ஒருமாத கால கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
05. குறித்த தரத்திற்கு மற்றும் மாதிரிக்கு அமைய பொருட்கள் மற்றும் சேவைகளை தேவையான அளவுக்கு குறித்த திகதியில் வழங்குதல் வேண்டும்.
06. அனைத்து வழங்கல்களையும் வைத்தியசாலைக்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.
07. வழங்குநர்களைப் பதிவுசெய்யும் போது வியாபாரப் பெயர் பதிவு சட்டவாக்கத்தின் கீழ் பதிவு செய்துள்ள வழங்கலுக்கு எதிர்பார்க்கின்ற அனைத்துப் பொருள் வியாபர நிலையங்களில் இருந்தும் சந்தைப்படுத்தப்படுகின்ற மற்றும் தேவையான அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் வழங்குநராக பதிவு செய்யப்படும்.
08. மேலதிக விபரங்கள் பெறவிரும்பின் கணக்காளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம் 021 222 3149 உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
09. உருப்படி இலக்கம் B [அறுவை சிகிச்சை மற்றும் மருத்துவ பொருட்களா] க்கு நீங்கள் பதிவு செய்யும் போது பின்வரும் தகவல்களையும் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

தயாரிப்பு எல்லை [Product range]
உற்பத்தியாளர் அங்கீகாரக்கடிதம் [Copy of manufacturer authorization letter] CDDA நகல்
நிறுவுதல் அடிப்படை - [Installation Base] (இது தொடர்பான மேலதிக தகவல்கள் இருப்பின் அவற்றை சமர்ப்பிக்க முடியும்).

**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

*மாதிரிவிண்ணப்பபடிவம்*

| | |
|---|---|
| காசுபற்றுச்சீட்டு/ காசுக்கட்டளை இல: | |
| திகதி: | |
| தொகை | |

### வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2023
### போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

1.நிறுவனத்தின் பெயர் :
2.நிறுவனத்தின் முகவரி :
3.தொலைபேசி இல. :
4.தொலைநகல் இல. :
5.மின்னஞ்சல் முகவரி :
6.வியாபாரப் பதிவுபெயர் :
(வியாபாரப் பதிவுச்சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
7.VAT:பதிவு இலக்கம் :
8.கடன் வசதி பற்றிய விபரம் (காலஎல்லை / தொகை):

| உருப்படி இலக்கம் | வழங்கல்/சேவை விபரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

என்னால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் சரியானது எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரினால் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருட்கள்/சேவைகள் வழங்குவதற்கு உறுதியளிப்பதுடன் ரூபா............க்குரிய பற்றுசீட்டு / காசுக்கட்டளை இத்துடன் இணைத்துள்ளேன்.

..............................
விண்ணப்பதாரியின் பெயர்

..............................
விண்ணப்பதாரியின் ஒப்பமும் நிறுவன இறப்பர் முத்திரையும்

................
திகதி

(CR 38 ) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைநடுவே அகலிப்புப் பணிகள் உயிராபத்தில் பயணிகள்

## வீதி அதிகாரசபைக்கு கடிதம்

யாழ்ப்பாணம், நவ. 11

அராலி கிழக்கு பாலச் சந்தியிலிருந்து அராலித் துறைக்குச் செல்லும் பிரதான வீதியின் கைவிடப்பட்ட அகலிப்பு நடவடிக்கைகளை மீள மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் த. நடனேந்திரனால் யாழ். வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அராலி கிழக்கு பாலச் சந்தியிலிருந்து அராலித் துறைக்குச் செல்லும் பிரதான வீதியின் அகலிப்பு நடவடிக்கைகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் ஆரம்பிக்கப்பட்டு தற்போது கைவிடப்பட்டுள்ளது.

அகலிப்புக்காக வீதியின் ஒரு பகுதியும் வெட்டப்பட்டுள்ளதால் வீதி குண்டும் குழியுமாக மாறியுள்ளது. வீதியிலுள்ள மதகுகளும் உடைந்து காணப்படுகின்றன. இதனால் வாகனங்கள் ஒன்றையொன்று கடந்து செல்கையில் விபத்துக்களுக்குள் சிக்குகின்றன.

வீதியால் பயணம் செய்வோர் உயிராபத்தின் மத்தியிலேயே பயணிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. மழைகாலங்களில் இன்னமும் பெரும் இன்னல்களுக்கு மக்கள் முகம்கொடுக்கின்றனர்.

மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு குறித்த பகுதிக்கு களப்பயணம் மேற்கொண்டு தொழில்நுட்ப ரீதியாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளது. (ச-27)

## மணிவிழா வாழ்த்துக்கள்




பிரதி அதிபர்
திருமதி.க.இரவிச்சந்திரன்

யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில்
மணிவிழாக் காணும் எங்கள் பிரதி அதிபர்

### திருமதி கலாவதி இரவிச்சந்திரன்

**பிரதி அதிபர் - (SLTS - I)**
**(பயிற்றப்பட்ட வர்த்தகம்)**

**சேவை விபரம்**

- 21.10.1988 - 01.02.1993 - யா / தோப்பு அருள்நந்தி வித்தியாலயம்
- 02.02.1993 - 31.12.1994 - பலாலி ஆசிரியர் கலாசாலை
- 01.01.1995 - 31.12.1996 - யா / புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி
- 01.01.1997 - 01.07.1997 - யா / பத்தமேனி இரட்னேஸ்வரி வித்தியாலயம்
- 02.07.1997 - 13.07.2010 - யா / ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்
- 14.07.2010 - 11.11.2022 - யா / அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை

வாழ்த்துவோர் :
நட்புறவுக்கழகம்
யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை

## விற்பனை பிரதிநிதி தேவை

எமது நிறுவனத்தின் மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களை விற்பதற்கு விற்பனை பிரதிநிதி தேவை.

**075 138 4697, 074 307 2038**

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம் ரவுண், பிரபல **புத்தக சாலைகக்கு காசாளர், உதவி விற்பனையாளர்** உடன் தேவை.

**077 663 9304, 072 287 5625**

உ
சிவமயம்

## தசாக கிரஹயக்ஞ அழைப்பு



நிகழும் சுபகிருது வருஷம் ஐப்பசித் திங்கள்
பதினாறாம் நாள் புதன்கிழமை
02.11.2022 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

**பிரம்மஸ்ரீ இராமநாத சர்மா சுரேஸ்வர சர்மா**

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள்
பின்வரும் தினங்களில் நடைபெறும்.

- **11.11.2022 வெள்ளிக்கிழமை காலை தசாகம் (காலை 10.00 மணி)**
- **12.11.2022 சனிக்கிழமை காலை - ஏகோதிஷ்டம், மாசியம்**
- **13.11.2022 ஞாயிற்றுக்கிழமை காலை - சபிண்டீகரணம்**
- **14.11.2022 திங்கட்கிழமை காலை - கிரஹயக்ஞம் (மதிய போசனம் 12.00 மணி) இத்தினங்களில் நடைபெறும் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.**

**வேலணை பெருங்குளம்,**
**முத்துமாரியம்மன்.**

**குடும்பத்தினர்.**

(cs 21759) (2.6)

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை
## பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பன குத்தகைக்கு/வாடகைக்கு விடுவதற்கான
## மீள் கேள்வி அறிவித்தல் 2023

**கேள்விப் பத்திரம் வழுங்கும் இறுதித்திகதி :- 25.11.2022 வெள்ளிக்கிழமை ந.ப 12.00 மணிவரை**
**கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி :- 25.11.2022 வெள்ளிக்கிழமை பி.ப 02.00 மணிவரை**
**கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 25.11.2022 வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணி**

| இல | குத்தகைவிபரம் | மாதவாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | மல்லாகம் உப அலுவலகம் | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 53,295.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | அளவெட்டி மலைவேம்படி கோழிக்கடை இல – 06 | 1,500.00 | 52,250.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | அளவெட்டி மலைவேம்படி ஆட்டிறைச்சிக்கடை இல – 07 | 1,500.00 | 23,132.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | அளவெட்டி மலைவேம்படி கருவாட்டுக்கடை | 1,000.00 | 10,450.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | மல்லாகம் பொதுச்சந்தை | ...... | 115,140.00 | 1,000.00 | 1,000.00 |
| 06 | மல்லாகம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,750.00 | 769,225.00 | 10,000.00 | 1,000.00 |
| 07 | மல்லாகம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 2,750.00 | 105,025.00 | 1,000.00 | 1,000.00 |
| 08 | மல்லாகம் பொதுச்சந்தை கோழிக்கடை | 2,750.00 | 556,320.00 | 10,000.00 | 1,000.00 |
| 09 | இறால்மடம் சந்தை | ..... | 23,750.00 | 1,000.00 | 1,000.00 |
| 10 | இறால்மடம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1,250.00 | 543,065.00 | 10,000.00 | 1,000.00 |
| 11 | கும்பலை மாட்டிறைச்சிக்கடை | 1,750.00 | 657,514.00 | 10,000.00 | 1,000.00 |
| | தெல்லிப்பளை உப அலுவலகம் | | | | |
| 01 | கூத்தன்சீமாச் சந்தைகோழிக் கடை | 1,050.00 | 73,150.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | கூத்தன்சீமாச் சந்தைகருவாட்டுக்கடை | 1,050.00 | 15,675.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 13,810.00 | 1,000.00 | 1,000.00 |
| | மயிலிட்டி உப அலுவலகம் | | | | |
| 01 | வீமன்காமம் பொதுச்சந்தை கருவாட்டுக்கடை | 1,050.00 | 13,810.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | குரும்பசிட்டி சந்தை | .......... | 10,640.00 | 1,000.00 | 1,000.00 |
| | காங்கேசன்துறை உப அலுவலகம் | | | | |
| 01 | காங்கேசன்துறை பொதுச்சந்தை | .......... | 71,250.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | காங்கேசன்துறை சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,200.00 | 63,650.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல.1 | 1,200.00 | 57,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | காங்கேசன்துறை சந்தை கருவாட்டுக்கடை இல.2 | 1,200.00 | 50,635.00 | 1,000.00 | 1,000.00 |

குறிப்பு :
மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள 28.10.2022 திகதிய பத்திரிகையில் பார்வையிடவும் அல்லது பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 0212241130 தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

**11.11.2022**

**திரு.சோமசுந்தரம் சுகிர்தன்.**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை**
**வலிவடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காரைநகர் சபையின்
# வரவு - செலவுத்திட்டம் மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம், நவ. 11
காரைநகர் பிரதேசசபையின் 2023 ஆம் வருடத்துக்கான வரவு- செலவுத்திட்டம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல் எதிர் வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை மக்கள் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்று பிரதேசசபையின் தவிசாளர் க.பாலச்சந்திரன் தெரிவித்தார். காரைநகர் பிரதேசசபையின் அமர்வு பிரதேச சபையின் மண்டபத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது. இதன்போதே 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் இறுதி செய்யப்பட்டது.
அதற்கமையவே காரைநகர் பிரதேசசபையின் வரவு- செலவுத் திட்டம் காரைநகர் பிரதேசசபையின் தலைமை அலுவலகம் மற்றும் உபஅலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டது என்று சபையின் தவிசாளர் தெரிவித்தார். (ஒ-14,125)






# குளமாக மாறிய துணவிச் சந்தி
# ஒரு வாரத்தில் 5 விபத்துக்கள்!

### *தற்காலிகமாகவேனும் செப்பனிடுமாறு மக்கள் கோரிக்கை*

**யாழ்ப்பாணம், நவ. 11**
**நவாலி - சங்கரத்தை வீதியிலுள்ள துணவிச் சந்தியில் மழைநீர் தேங்கி குளம் போல் காணப்படுவதால் விபத்துக்கள் நேரிடுகின்றன என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**



786 வழித்தட பேருந்து பயணிக்கும் நவாலி - சங்கரத்தை வீதியூடாக பயணிப்போர் அன்றாடம் பல இன்னல்களுக்கு முகம்கொடுத்து அச்சத்தின் மத்தியிலேயே பயணம் மேற்கொள்கின்றனர்.
பாடசாலை மாணவர்கள், முதியோர்கள் உட்பட அன்றாட வேலைகளுக்குச் செல்வோர் மாற்றுவழி இல்லாத காரணத்தால் இந்த வீதியையே பயன்படுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது.
குறிப்பாக துணவிச் சந்தியில் பெரும் பள்ளம் ஒன்று ஏற்பட்டுள்ளதால் தற்போது பெய்துவரும் மழையால் குளம் போல் நீர் தேங்கி உள்ளது.
குறித்த வீதியில் கடந்த ஒருவாரத்துக்குள் சுமார் 5 விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன.
எனவே இந்த வீதியை தற்காலிகமாகவேனும் செப்பனிட்டுத் தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்களால் மேலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-27)



## பரஞ்சோதி வித்தியாலயத்தில் போதைப்பொருள் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், நவ. 11
கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் போதைப்பொருள் விழிப்புணர்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.
வடக்கில் மட்டுமன்றி தற்போது நாடுமுழுவதும் போதைப்பொருள் பாவனை இளையோரிடத்தில் பெருமளவில் தாக்கம் செலுத்தியுள்ளது. அதுமட்டுமன்றி பாடசாலை மாணவர்களும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி அழிவடைந்து வருகின்றனர்.
இந்த நிலையில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனமானது, போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.
அதன் ஒரு பகுதியாகவே வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் உறுப்பினர்களால் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (ஒ-14,27)

## அனுமதிப் பத்திரமின்றி மணலேற்றியவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 11
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொடிகாமம் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் டிப்பர் சாரதி ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என கொடிகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
வீதிச் சோதனையில் ஈடுபட்ட கொடிகாமம் போக்கு வரத்து பொலிஸார் குறித்த டிப்பரை வழிமறித்து சோதனையிட்டனர்.
இதன்போது அனுமதிப்பத்திரமின்றி மணலேற்றியமை கண்டறியப்பட்டதையடுத்து 24 வயதான குறித்த டிப்பர் சாரதி கைதுசெய்யப்பட்டார்.
சந்தேகநபரை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

### புதிதாக அமைக்கப்படவுள்ள
# நிலையியற் குழுக்கள் தொடர்பில் பரிந்துரைப்பதற்குத் தனியான குழு

கொழும்பு, நவ. 11
நாடாளுமன்றத்தில் புதிதாக அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மூன்று நிலையியற் குழுக்கள் குறித்து மேலும் ஆராய்ந்து பரிந்துரைகளை முன்வைக்க 4 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவை அமைக்க நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



வங்கித் தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழு, வழிவகைகள் பற்றிய குழு, பொருளாதார உறுதிப்படுத்தல் குழு ஆகிய மூன்று குழுக்களுமே இவ்வாறு அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷ டி சில்வா, எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சாகர காரியவசம் ஆகியோரே இந்த விசேட குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.
தற்பொழுது நடைமுறையில் உள்ள நிலையியற் குழுக்களான அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு), அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா குழு), அரசாங்க நிதி பற்றிய குழு ஆகிய குழுக்களின் செயற்பாடுகள் இந்தப் புதிய நிலையியற் குழுக்களின் விடயதானங்களுடன் மேற்படுகை செய்கின்றனவா என்பது குறித்து ஆராய்ந்து திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமா அது பற்றிய பரிந்துரைகளைத் தக் குழு முன்வைக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 05 . 01 . 1952

மறைவு 12 . 10 . 2022

கடந்த (12.10.2022) புதன்கிழமை திருதியை திதியில்
சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

### அமரர் சரோஜினிதேவி நாகேந்திரன்

**(ஓய்வுபெற்ற பிரதி முகாமையாளர்-மக்கள் வங்கி)**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் கடந்த (09.11.2022) புதன்கிழமை காலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (11.11.2022) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு உடன் வந்து உதவியோருக்கும் தொலைபேசி மற்றும் நவீன தொடர்பு சாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், பதாகைகளூடாகவும் எங்கள் துயரத்தில் பங்குகொண்டவர்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு பல்வேறு வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**"இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்."**


**'நேசவாசா'**
**மீசாலை வடக்கு, கொடிகாமம்.**
**077 224 9523**

**குடும்பத்தினர்.**

(GR7059) 1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 11 . 1940



மறைவு 06 . 11 . 2022

### திரு.Dr.அன்ரன் சந்தியாப்பிள்ளை

**( Doctor Anton)**

இல.40, பழைய பூங்கா வீதி சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.Dr.அன்ரன் சந்தியாப்பிள்ளை கடந்த 06.11.2022 அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கபிறியல்பிள்ளை ரோசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ரோகினி அவர்களின் அன்புக் கணவரும், ஜூட் சேவியர் (கனடா), லக்ஷாயினி (ஜேர்மனி), கிருஷாந்தி (ஜேர்மனி), றோஜி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற லூர்தம்மா அவர்களின் அன்புச் சகோதரரும், கவிதா, கிருஷாந்த், ராஜன், றேகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ரஷ்மியா, தனுஷ்மியா, ஷர்மி, டெனிக்கா, ஜெஃப்றி, கெவின், ஷன்டல், ஷருன், ரியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.11.2022) வெள்ளிக்கிழமை இல.40,பழையபூங்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் அவரது முகவரியில் இருந்து பிற்பகல் 02.30 மணியளவில் யாழ்.மரியன்னை தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**
**0212212841**

## கண்ணீர் அஞ்சலி

### அமரர்
### பரமநாதன் சத்தியசீலன்

(ஸ்ரீ முத்துமாரியம்மன் பல்பொருள் வாணிபத்தின் சகல துறை உத்தியோகஸ்தர்)



எமது நிறுவனத்திற்கு மூன்று தசாப்த காலமாக உறுதுணையாக நின்று எமது நிறுவனம் உயர்வதற்கு வழி வகுத்தவர். எமது நிறுவனத்தின் வெற்றிகளின் போது வெற்றிக்கு வித்திட்டவரும். இன்னல்களின் போது இன்னல்களை தீர்ப்பதற்கு முன் நின்று அல்லும் பகலும் அயராது பாடுபட்டவருமான எமது சகோதரர் சீலன் அண்ணாவின் இழப்பை எமது இதயம் ஏற்க மறுக்கின்றது. இமை மூடும் நேரத்தில் எம்மை விட்டு பிரிந்த சீலன் அண்ணா உங்களை என்றும் மறவோம். சீலன் அவர்களின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்ரீ முத்துமாரியம்மன் பல்பொருள் வாணியம்**
**உரிமையாளர்களும் ஊழியர்களும்.**

பிறப்பு 27.01.1972

இறப்பு 08.11.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுதி மோசடி வழக்கு: சட்டத்தரணி கைதானார்

யாழ்ப்பாணம், நவ. 11

போலி உறுதி மூலம் காணி மோசடி இடம்பெற்றமை தொடர்பான குற்றச்சாட்டில் சட்டத்தரணி ஒருவரும் முன்னாள் பாடசாலை அதிபரும் பொலிஸ் சிறப்புக் குற்ற விசாரணைப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

காணி ஒன்றின் உரிமையாளர்களான தம்பதியினர் மரணித்திருந்த நிலையில், அவர்களின் போலிக் கையொப்பங்கள் மூலம் நிறைவேற்றப்பட்ட உறுதியினால் மோசடியாக உரிமை மாற்றம் செய்யப்பட்டது. அது தொடர்பாக யாழ்ப்பாணம் சிறப்புக் குற்ற விசாரணைப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை நடத்திய பொலிஸார், கடந்த மாதம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்கைத் தொடுத்து சந்தேகநபர் ஒருவரைக் கைதுசெய்து மன்றில் முற்படுத்தினர்.

பொலிஸாரின் புலன் விசாரணைகள் நிறைவடையாத நிலையில் சந்தேகநபர் கடந்த ஒரு மாதமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் மீண்டும் வழக்கு நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது தமது புலன்விசாரணை தொடர்பான தொடர் அறிக்கையை பொலிஸ் தரப்பு தாக்கல் செய்தது. மோசடியில் சம்பந்தப்பட்ட ஏனைய சந்தேகநபர்கள் ஏன் இன்னமும் கைது செய்யப்படவில்லை என்று மன்று கேள்வி எழுப்பியது. இது தொடர்பில் நீதிமன்று வெளிப்படுத்திய அதிருப்திகளைத் தொடர்ந்து மோசடிக்கு உடந்தையாக இருந்த சட்டத்தரணியும், இந்த வழக்குடன் தொடர்புடைய மற்றைய சந்தேகநபரான யாழ்ப்பாணம் பிரபல கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி கையூட்டு குற்றச்சாட்டில் சிக்கிக்கொண்டு பதவியில் இடைநிறுத்தப்பட்ட ஒருவரும் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

(அ-ம-26-125)

## காணாமற்போயிருந்த...

வயதான பெண் குழந்தையுடன் கணவனைப் பிரிந்து வாழ்ந்த நிலையில், அண்மையில் குறித்த பெண்ணையும் குழந்தையையும் கணவன் சேர்ந்து வாழ்வதற்காக அழைத்துச் சென்றார். இந்த நிலையில், நிறஞ்சினி இறந்துவிட்டார் என்பதான கண்ணீர் அஞ்சலியொன்று அண்மையில் சமூக ஊடகங்களில் பரவியது. அத்துடன், குறித்த பெண் குழந்தை மிலேச்சத்தனமாகத் தாக்கப்படும் காணொலியும் சமூக ஊடகங்களில் வைரலானது. இதையடுத்து அந்தக் குழந்தையை மீட்கவும், குறித்த பெண்ணுக்கு என்ன நடந்தது என்பதை அறியவும் துரித நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன. இந்த நிலையில் குறித்த பெண்ணும் அந்தக் குழந்தையும் யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் வைத்து நேற்று மீட்கப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கடமையாற்றும் குடும்ப நல உத்தியோகத்தர் டினுசா அனலை தீவு செல்வதற்கு பேருந்துக்காகக் காத்திருந்தபோதே மேற்படி இருவரும் அவதானிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் இருவர் தொடர்பான தகவல்கள் அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த வடமாகாண சிறுவர் பராமரிப்பு நன்னடத்தைப் பிரிவினர் தாயையும் சேயையும் மீட்டு மருத்துவப் பரிசோதனைகளுக்காக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

அந்தப் பெண்ணின் கணவன் மனைவியையும், குழந்தையையும் திருகோணமலைக்கு அழைத்துச் சென்றிருந்த நிலையில், அவர்கள் இருவரும் அங்கு துன்புறுத்தல்களை எதிர்கொண்டனரா? காணொலியில் குழந்தையைத் தாக்கியது யார்? பெண்ணின் ஒளிப்படத்துடன் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டது யார்? உள்ளிட்டவை தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-ம-125-26)

## தமிழர்களின்...

எகிப்தில் நடைபெற்ற பருவநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர் நாட்டுக்குத் திரும்பிய ஜனாதிபதி, நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்களின் பிரச்சினைக்கு அடுத்த சுதந்திர தினத்துக்குள் தீர்வு காண்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். காணாமற்போனோர் தொடர்பில் ஆராய்ந்து விசாரணைகளை நிறைவுசெய்வதற்காக மேலதிக குழுக்களை நியமித்து விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு நீதி அமைச்சருக்கு பணிப்புரை வழங்கியுள்ளேன். வெளிநபர்கள் எமது நாட்டு பிரச்சினைகளில் தலையிடத் தேவையில்லை. நாமே எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு முன்னோக்கிச் செல்லவேண்டும்.

எமது சட்டங்களை மறுசீரமைக்க வேண்டும். அந்தப் பொறுப்பு நீதி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதில் ஒரு பகுதியே இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்திலும் அடுத்த வருடத்திலும் அவர் நாடாளுமன்றத்தில் அவை அனைத்தையும் சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கிறேன். நாடாளுமன்றத்தை மேலதிக நாள்களில் கூட்டியாவது இவற்றை நிறைவேற்றுமாறு கோருகிறேன். சட்டங்களை புதுப்பிக்கவேண்டும்.

நாம் எமது பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், உண்மையைக் கண்டறியும் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு மற்றும் ஊழல் தொடர்பில் புதிய சட்டங்கள் ஆகியவற்றை உருவாக்க வேண்டும். ஜனவரி, பெப்ரவரி மாதமளவில் துறைசார் அமைச்சர்கள் இதனைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து வருகின்றோம். தடுத்து வைக்கப்பட்டிருந்த சிலரை (தமிழ் அரசியல் கைதிகள்) விடுதலை செய்துள்ளோம். மேலும் சிலர் விடுவிக்கப்பட வேண்டியுள்ளனர். எழுத்தாளர் ஒருவர் இருக்கின்றார். அவருக்கு எதிரான வழக்கு உள்ளது. வழக்கு நிறைவடைந்த பின்னர் அவர் தொடர்பிலும் செயற்படுவோம். இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதே எமது நோக்கமாகும்.

அடுத்த வாரமளவில் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் விசேட கலந்துரையாடல் ஒன்று உள்ளது. எனது நல்ல நண்பர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அதில் பங்கெடுப்பார் என நினைக்கின்றேன். அவர் அதில் அரைவாசி வரை பயணித்தால் கூட பெரிய விடயமாக இருக்கும்.

வடக்குக்காக நாம் பல அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டுள்ளோம். அதற்கான மதிப்பீடுகளும் எம்மிடமுள்ளன. வடக்கில் புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன் பயன்பாடு தொடர்பிலும் கவனம் செலுத்தவேண்டும். திருகோணமலையில் அபிவிருத்திச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையும் மேம்படுத்தப்பட்டு வருகின்றது. இவை யாவும் இலங்கையர்களாகிய எமக்காகவே முன்னெடுக்கப்படுகின்றன - என்றார். (அ-ம-22)

## யாழ்....

கடத்தல்களை முறியடிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. இராணுவத்தினர் வீதிகளில் சோதனைச் சாவடிகளை அமைக்கவும் சோதனைகளில் ஈடுபடுவதற்கும் பலரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்த நிலையில், யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நேற்று இராணுவத்தினர் பரவலாக வீதிச் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

பருத்தித்துறை வீதி, பெருமாள் கோவில் பகுதி உள்ளிட்ட பல பகுதிகளில் இராணுவத்தினரின் இந்தச் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தன. (அ-ம-17)

## திருட்டுக்கும்பலிடம்...

யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி நிகால் பிரான்ஸிஸ் தலைமையிலான அணியினரால் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஓகஸ்ட் மாதத்தில் இருந்து நவம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் பகல் நேரங்களில் பல்வேறு வீடுகளை உடைத்துத் திருடிய குற்றச்சாட்டுக்களுக்காக மேற்படி இரு சந்தேகநபர்களும் யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதான இரு சந்தேகநபர்களும் கொட்டடிப் பகுதியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் முறையே 20 மற்றும் 22 வயதுடையவர்கள். சந்தேகநபர்களுக்கு எதிராக 16 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன், இவர்களிடம் இருந்து திருட்டு நகையைக் கொள்வனவு செய்த குற்றச்சாட்டில் மேலும் இரண்டுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட முதல்கட்ட விசாரணைகளின் அடிப்படையில், வேலணையில் 20 பவுண், வங்களாவடியில் ஏழரைப் பவுண், சுருவிலில் 13 பவுண், புங்குடுதீவில் 3 பவுண், முழங்காவிலில் 11 பவுண் மற்றும் காரைநகரில் வீடுடைத்து இடம்பெற்ற திருட்டு உள்ளிட்ட வேறுபல திருட்டுக்களுடனும் தொடர்புள்ளதாகத் தெரியவந்துள்ளதுடன், அதை சந்தேகநபர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். சந்தேகநபர்கள் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன - என்றனர். (அ-ம-26)

## துணைத்தூதரகம்...

இனந்தெரியாத நபர்களால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை நடத்திய பொலிஸார் மூன்று சந்தேகநபர்களைத் தடுத்து வைத்துள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-26)

## முப்படைகளுக்கும்...

மேலதிக செயலர், காணி ஆணையாளர் நாயகம், காணி உரித்து திணைக்களத்தின் ஆணையாளர், நில அளவையாளர் நாயகம், இராணுவம், கடற்படை, விமானப் படை என்பனவற்றுடன், வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் காணி மேலதிக மாவட்டச் செயலர்கள், யாழ்ப்பாணப் பிரதேச செயலர், தெல்லிப்பழை பிரதேச செயலர், மருதங்கேணி பிரதேச செயலர், வேலணைப் பிரதேச செயலர், ஊர்காவற்றுறை பிரதேச செயலர், காரைநகர் பிரதேச செயலர், சங்கானை பிரதேச செயலர், சண்டிலிப்பாய் பிரதேச செயலர், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர், மன்னார் நகர பிரதேச செயலர், முசலி பிரதேச செயலர், நானாட்டான் பிரதேச செயலர், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அரச காணிகள் மற்றும் காணி சுவீகரிப்பு தொடர்பான விடயங்களில் தீர்வு காணப்படவேண்டியவை தொடர்பில் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது. முப்படையினரும் வடக்கில் முன்னெடுக்கும் காணி சுவீகரிப்புக்கு எதிராக மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் தொடர்ச்சியாக போராடிவரும் நிலையில் வடக்கு ஆளுநர் இத்தகைய கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

## கிளி.யில்...

தையடுத்தே அவர் உயிரிழந்தார். முகமது நாசிம் யோகலட்சுமி (வயது-69) என்பவரே உயிரிழந்தவராவார். விபத்துத் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் சந்தேகநபர்கள் இருவரைக் கைதுசெய்துள்ளனர். (அ-ம-113)

## 'ஜி-20'...

நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கோப்-26 க்குப் பின்னர் எந்தவித முன்னேற்றமும் இருக்கவில்லை என்பதை நாம் கோப் -27க்குச் சென்றிருந்தபோது அறிந்து கொண்டோம். ஜி-20 ஐச் சேர்ந்த பல அபிவிருத்தியடைந்த நாடுகள் 205க்கான 1.5 பாகை செண்ரிகிரேட் இலக்கு தொடர்பில் கேள்விகளை எழுப்பின.

ஜி-20 நாடுகள் எந்த வகையிலும் தமது தொழிற்சாலை உமிழ்வை குறைத்துக் கொள்ளவில்லை. அவர்கள் ஏற்கனவே வாக்குறுதி அளித்தது போல 100 மில்லியன் டொலரையும் இதற்காக வழங்கவில்லை. நாம் வருடத்துக்கு 350 பில்லியன் டொலரை இழப்பீடாகக் கோரியிருந்தாலும் எமக்கு அது எதுவும் கிடைக்கவில்லை. அவர்கள் அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

கோப்- 27 மாநாட்டின் ஏற்பாட்டைப் பார்த்தால் அங்கே தீவிரமான கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்கு அபிவிருத்தியடைந்த நாடுகள் மற்றும் ஜி-20 அமைப்புக்கள் இருக்கவில்லை. சில தலைவர்கள் ஆரம்ப நிகழ்வுக்கு மாத்திரமே வருகை தந்திருந்தனர். அவர்கள் பிரதான மாநாட்டில் கலந்துரையாடுவதாக இருந்தபோதிலும் அதனையொட்டி நடைபெற்ற ஏனைய நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக அங்கிருந்து விரைவாக வெளியேறிவிட்டனர். நாம் இதே மாதிரி தொடர்ந்து செல்ல முடியாது. இந்த நிலைமை தொடருமாக இருந்தால் கோப்-28இல் ஜி-20 நாடுகளுடன் முட்டிமோதுவதை விட வேறு வழியில்லை - என்றார். (அ-ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண் உற்பத்தி முயற்சியாளரை மேம்படுத்தும் கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தில் சமாச பெண் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு நிதித் தேவைப்பாடும் அதற்கான தீர்வுகளும் குறித்து திருநெல்வேலி விவசாயத் திணைக்கள மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

'அவுஸ்திரேலியன் எயிட்' நிறுவனத்தின் அனுசரணையில் 'விழுதுகள்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது பெண் உற்பத்தி முயற்சியாளர்களின் உற்பத்திகளை மேம்படுத்தல் மற்றும் அவர்களின் சந்தேகங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டதுடன் வங்கிகளால் வழங்கப்படும் இலகு கடன் திட்டங்கள் தொடர்பிலும் எடுத்துரைக்கப்பட்டது. நிகழ்வில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் வங்கி முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-159)

## மணவாளக்கோல உற்சவம்

சாவகச்சேரி, நவ. 11

சாவகச்சேரி - கல்வாய் அருள்மிகு வேதவன விநாயகர் ஆலய மணவாளக்கோல உற்சவம் இன்று காலை 9 மணிக்கு ஆலய பிரதம குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

மாலை 4 மணிக்கு வசந்தமண்டபப் பூசை வழிபாடுகளுடன் பஞ்சமுக அர்ச்சனை, திருவூஞ்சற்பாடல் பாடப்பட்டு விநாயநர் வீதி வலம்வருதல் இடம்பெறும். (அ-ம-131)


**வேலையாள்கள் தேவை**

யாழ். புகையிரத நிலையத்திற்கு அருகில் உள்ள நட்சத்திர விடுதியில் பகுதி நேர / முழுநேர Marketing Designer, IT Technician தேவை.

077 780 0075

**DHL துரித கடிதங்கள் பொதிகள் சேவை**

▲சகல நாடுகளுக்குமான கடிதங்கள் 4 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
▲11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகைகள்
▲கனடா 11 Kg - 1200/=

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna. 0777 554528

# வேலை வாய்ப்பு

பெண் பணியாளர்தேவை

Arun Wings Private Limited
143, Temple Road,
Jaffna.

Salary : நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 076 847 2458

# விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு கயட்டைப்புலம் வீதியில் நிலப்பரப்பு முறையே 10, 4 இரண்டு காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பிரித்து வழங்கப்படும். (CS 21636) (3/6)

தொடர்பு
077 843 5502, 074 373 9982


## தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை பிரிவுக்கு உபகரணங்கள் கையளிப்பு



யாழ்ப்பாணம், நவ. 11

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கு காற்று சீராக்கும் கருவி மற்றும் குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் என்பன மருத்துவமனையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு மாநாட்டு மண்டபத்தில் வைத்து அண்மையில் கையளிக்கப்பட்டன.

கலர்ஸ் ஒவ் ஹரீஷ் நாதன் பவுண்டேஷனின் அனுசரணையில் 1.5 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்கள், தெல்லிப்பழை மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் எம்.எம் ரேமண்ட்டிடம் கையளிக்கப்பட்டது. (ஓ-14)



## குருதிக்கொடை

முல்லைத்தீவு, நவ. 11

யாழ்.போதனா மருத்துவமனையில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக மல்லாவி மத்திய கல்லூரி சமூகத்தால் குருதிக்கொடை நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டது.

குருதிக்கொடையில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், சமூக ஆர்வலர்கள், யாழ்.போதனா மருத்துவமனையின் குருதி வங்கிப் பிரிவினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஒ-14)


சிங்கப்பூரில் வேலைவாய்ப்பு

- Midwives, Nurses, Domestic Nanny Salary 800-1000 SGD
- Caregiver, Elder Caregiver Salary 600-800 SGD
- House Maid Singapore 600 SGD

16.11.2022 அன்று யாழ்ப்பாணத்தில் மாபெரும் நேர்முகத் தேர்வு

இடம் : Subas hotel - Jaffna
நேரம் : காலை 9.30 AM - மாலை 2.00 PM

சிங்கப்பூர் தொழில் வழங்குனரால் நேர்முகத் தேர்வு நடைபெறும்.
ஆகக்குறைந்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட தொகை அறவிடப்படும்.

மலேசியாவில் வேலைவாய்ப்பு. ஆண்கள்/ பெண்கள்

Hotel உதவியாளர் Malaysia 1500 MYR

நேர்முகத் தேர்வுக்கு வரும் போது Passport, சுயவிபரக்கோவை (CV) கொண்டு வரவும்

புருனே நாட்டில் வேலைவாய்ப்பு

- பொது உதவியாளர் – ஆண்
- (40 வயதுக்குட்பட்டோர்)
- சம்பளம் 500 புருனே டாலர்கள் +OT
- மேலதிக நேரக் கொடுப்பனவுகள்
- விரைவான புறப்பாடுகள்

முன் அனுபவம் தேவையில்லை உடன் விண்ணப்பிக்கவும் உணவு வசதி செய்து தரப்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவிற்கு உதவி ஆட்கள் தேவை

Orient Lanka Employment Agency (Lic no 2755)
0777228231 அனுசரணையுடன் நேர்முக தேர்வு நடைபெறும்


## நூலகம் கையளிப்பு



செலான் வங்கியின் கூட்டாண்மை சமூகப்பொறுப்புத் திட்டத்தின் 216 ஆவது நூலகம், செலான் வங்கி மானிப்பாய் கிளையால் உடுவில் மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் புதன்கிழமை கல்லூரியிடம் கையளிக்கப்பட்டது. செலான் வங்கி மானிப்பாய் கிளையின் 5 லட்சம் ரூபா நிதியில் நூலகத்துக்கான உட்கட்டமைப்பு வசதிகள், தளபாடங்கள், நூல்கள் என்பனவற்றை செலான் வங்கி வழங்கியதோடு மடிக்கணினி ஒன்றையும் கல்லூரிக்கு அன்பளிப்பாக வழங்கியது. (ஒ-14)

*அரியாலை...*

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த தர்மரத்தினம் கோணேசன் (வயது-42) என்ற நபரே காயமடைந்தார். இது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-125-26-27)


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு.

- நல்ல தண்ணீரூற்றுச் சூழல்
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும்
- வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்:-

- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.

தொடர்பு:- ஜெயம்
077 814 7389
077 986 5457


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.